



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள கரூர் மாவட்டத்திற்கு வருகை நந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (8.7,2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதல் சட்டமன்ற தொகுதியான கரூர் மாவட்டம், குளித்தலையில் கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் அ.சிவராமன், மாநில வாத்தகர் அணி துணைத் தலைவர் பல்லவிராஜா, பொதுக்குழு உறுப்பினர் ஜபருல்லா உள்பட பல்லாயிரக்கணக்கான கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் தொண்டுகளையும் – நலத்திட்டங்களையும் மாணவர் சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில்

# செய்தி - மக்கள் தொடர்புத் துறை சார்பில் - பல்வேறு கலைப் போட்டிகள்!

## மாணவர்கள் – முன்னாள் மாணவர்கள் – ஆசிரியர்கள் கலந்து கொள்ள வேண்டுகோள்!

**சென்னை, ஜூலை 9 –**

**முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் அரும் தொண்டுகளையும், செயல்படுத்தி வரும் சிறப்பான நலத்திட்டங்களையும் மாணவர் சமுதாயம் அறிந்துகொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் பல்வேறு கலைப் போட்டிகளை நடத்துகிறது.**

இப்போட்டிகளில் இன்றைய மாணவர்களும் முன்னாள் மாணவர்களும் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*அதன் விவரம் வருமாறு:-*

தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான பள்ளிகளைத் திறந்து கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர் கல்விக் கண் திறந்த காமராசர். அவர் பிறந்த ஜூலை 15ஆம் நாளை “கல்வி வளர்ச்சி நாள்” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006ஆம் ஆண்டு அறிவித்து நடைமுறைப்படுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் பள்ளிகளில் “கல்வி வளர்ச்சி நாள்” கொண்டாடப்பட்டு வருகிறது.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அளித்த முக்கியத்துவத்தை நினைவு கூர்ந்து, மாணவர்களிடம் கல்வி குறித்த விழிப்புணர்வை வளர்க்கவும், அவர்கள் கல்வி கற்க ஊக்கப்படுத்திடவும் கல்வி வளர்ச்சி நாள் ஒரு நாள் வாய்ப்பாக அமைகிறது.

இத்திருநாளில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி தொடர்பான போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் முதலியவை நடத்தப்படுகின்றன.

கல்வி என்பது ஒரு மனிதரின் வாழ்க்கையிலும், சமூகத்தின் வளர்ச்சியிலும் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. கல்வி, தனி மனிதனின் அறிவு, திறன் மற்றும் விழுமியங்களை மேம்படுத்துகிறது. மேலும், தனிமனிதர்கள் தம் வாழ்க்கையில் வெற்றி பெறவும், அதன் மூலம் வாழும் சமூகத்திற்குப் பங்களிக்கவும் உதவுகிறது.

கல்வி ஒருவருக்குப் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளவும், அதனை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவும் உதவுகிறது. அப்படி ஒருவர் கல்வியால் தம் அறிவையும் திறன்களையும் உயர்த்திக் கொள்வதன் மூலம் அவை வாழ்க்கையில் முன்னேறவும், வாழ்க்கை இலக்குகளை அடையவும் உதவுகின்றன.

கல்வி ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. கல்வி கற்றவர்கள் சமுதாயத்தில் நல்ல குடிமக்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் செயல்படுவார்கள். கல்வி சமூகத்தில் உள்ள அறியாமை மற்றும் வறுமையை ஒழிக்க உதவுகிறது. கல்வி சமூகத்தில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாடுகளை எதிர்த்துப் போராட உதவுகிறது. கல்வி அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குகிறது, இது ஒரு சமூகத்தில் நீதியை நிலைநாட்ட உதவுகிறது. பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் மாணவர்களை மிகச் சிறந்த குடிமக்களாக உருவாக்கிட பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார்கள். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான உறவு என்பது மிக மிக நுட்பமானது. இதனை இத்தருணத்தில் நினைவு கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமான தாகும்.



கல்வி என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், தனி மனிதனின் மேம்பாட்டிற்கும் இன்றியமையாதது. எனவே, கல்வியைப் பெறுவதும், அதைக் கற்பிப்பதும் மிகவும் முக்கியப் பணிகளாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு இலவசச் சீருடை, காலணிகள், காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் முதலான பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இவை தவிர, கல்வி உதவித் தொகைகள் வழங்குவது, ஊக்கப் பரிசுகள் வழங்குவது, சமூகநீதி விடுதிகள் ஏற்படுத்தித் தருவது முதலான பல்வேறு திட்டங்களையும் திறம்படச் செயல்படுத்தி வருகிறார்கள். இவற்றின் பயனாகத் தமிழ்நாட்டில் கல்லாதவர்களே இல்லை எனும் உன்னதமான நிலை உருவாகியுள்ளது. இந்திய அளவில் தமிழ்நாடு கல்வித்துறை வளர்ச்சியில் முதல் மாநிலம் எனப் பாராட்டப்படுகிறது.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில் கொண்டாடப்படும் இந்த ஆண்டின் கல்வி வளர்ச்சி நாளில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம், சமூக வலைதளங்கள் வாயிலாக கீழ்க்கண்ட போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் தற்போது பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்களும், முன்னாள் மாணவர்களும் கலந்து கொள்ளலாம். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு நேரில் வாழ்த்துகள் கூறி, பாராட்டுச் சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்குவார்கள்.

போட்டிகளும் அதன் விவரங்களும் பின் வருமாறு;

**தற்போது பயின்று வரும் மாணவர்களுக்கான போட்டிகள்**

**1. என் பள்ளி என் பார்வையில்**

- **என் பள்ளியை நான் விரும்ப காரணங்கள்,**
- **என் பள்ளியில் ஒரு நாள்**
- **என்னை மாற்றிய ஒரு தருணத்தைப் பகிர்ந்து கொள்ளுதல்.**

இந்த மூன்று தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் கட்டுரை 1 பக்க அளவில்(அ) வீடியோ ரீல்ஸ் ஒரு நிமிடம் என்ற அளவில் எடுத்து அனுப்ப வேண்டும்.

**2. நான் என் பள்ளியின் பேச்சாளன்**

- **இல்லம் தேடி கல்வி**
- **முதலமைச்சரின் காலை உணவு திட்டம்**

போன்ற திட்டங்களைப் பற்றி ரீல்ஸ், வீடியோ எடுத்து அனுப்ப வேண்டும்.

**3. என் பள்ளி என் கலை**

- **மாணவர்கள் தங்களின் கனவுப் பள்ளி**
- **தமிழ்நாடு அரசின் திட்டங்கள்**
- **கரும்பலகை முதல் கணினி காட்சிப் பலகை வரை மாறிவரும் கல்வியின் முகம் என்ற ஏதேனும் ஒரு தலைப்பில் ஓவியம் வரைந்து அனுப்ப வேண்டும்.**

**4. என் கதை என் எழுத்தில்**

- **எனக்குப் பிடித்த ஆசிரியரிடமிருந்து நான் கற்றுக்கொண்டது ;**
- **தமிழ்நாடு கல்வியில் எவ்வாறு முதன்மையில் உள்ளது?**

என்ற தலைப்பில் கதை (அ) கட்டுரை 1 பக்க அளவில் எழுதி கோப்பாக அனுப்ப வேண்டும்.

**முன்னாள் மாணவர்களுக்கான போட்டிகள்**

**1. என் பள்ளி என் நினைவு**

- **உங்கள் வாழ்க்கையை உங்கள் பள்ளி எவ்வாறு மாற்றியது**

**என்பதை 1 பக்க அளவில் கட்டுரை (அ) ரீல்ஸ் ஒரு நிமிடம் அளவில் எடுத்து அனுப்ப வேண்டும்.**

**2.பள்ளிக்கூடம் வந்தேனே?**

- **நீங்கள் படித்த பள்ளி**
- **உங்களுக்கு பிடித்த ஆசிரியர்**

selfie (சுயமி) (அ) வீடியோ எடுத்து அனுப்ப வேண்டும்.

**3.என் அன்பான ஆசிரியை, ஆசான்**

- **எனக்கு பிடித்த ஆசிரியர்**

என்ற தலைப்பில் ரீல்ஸ் அல்லது ஒரு பக்க அளவில் கடிதம் எழுதி PDF கோப்புகளாக எடுத்து அனுப்ப வேண்டும்.

**4. கல்விக்கான தமிழ்நாடு அரசின் திட்டங்கள்;**

- **நான் முதல்வன்**
- **காலை உணவுத்திட்டம்**
- **இல்லம் தேடி கல்வித்திட்டம்**
- **எண்ணும் எழுத்தும்**

போன்ற திட்டங்களைப் பற்றி ரீல்ஸ், வீடியோ எடுத்து அனுப்ப வேண்டும்.

**முன்னாள் மற்றும் இந்நாள் ஆசிரியர்களுக்கான போட்டிகள்**

1. என் முன்னெடுப்புகள் ரீல்ஸ் உங்கள் பள்ளியில் நீங்கள் எடுத்த முன்னெடுப்புகள் மற்றும் முயற்சிகள் குறித்து ரீல்ஸ் வீடியோ எடுத்து அனுப்ப வேண்டும்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் படைப்புகளைக் கீழ்கண்ட துலங்கள் குறியீட்டில் (QR Code) ஸ்கேன் செய்து அனுப்பி வைக்கலாம். அல்லது tndiprmhmsmp@gmail.com என்ற மின்னஞ்சலிலும் அனுப்பலாம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

# திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிக்கை!

*திருச்சி, ஜூலை 9*

*தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் அவர்களுக்கு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு இன்று (9.7.2025) காலை 10 மணிக்கு அளிக்கப்படுகிறது.*

*இது குறித்து மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு:-*



*திருச்சி தெற்கு மாவட்டத்தில் ஜமால் முகமது கல்லூரியின் பவள விழா ஆண்டின் துவக்க விழா, குளோபல் ஜமாலின்ஸ் கட்டிட திறப்பு விழா ஆகிய நிகழ்வுகளுக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று (09.07.25) திருச்சி வருகை தரும் தமிழக முதல்வர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை விமான நிலையத்தில் வரவேற்பதற்கு கழக நிர்வாகிகள் அணி திரண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன் .*

*இந்நிகழ்வில் மாநில , மாவட்ட , மாநகர, பகுதி , ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட, வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அனைத்து நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தொண்டர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. மாவட்ட செயலாளர், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

## நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில்

# திருவேற்காடு ஏ.கே.லட்சுமணன் இல்ல திருமண விழா!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மணமக்களை வாழ்த்துகிறார்!

*திருவள்ளூர், ஜூலை 09;-*

*திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர் 6 வது வார்டு முன்னாள் பொருளாளர் ஏ.கே. லட்சுமணன் தேவிகா அவர்களின் இல்ல திருமணம் வரவேற்பு விழா இன்று (09.07.2025 புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் வானகரம் அடையாளம் பட்டு பகுதியில் உள்ள பத்மாவதி பேலஸில் நடைபெறுகிறது.*

*இதில் நகர மன்ற தலைவரும் நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமை தாங்குகிறார் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள்*



*பிரபு கஜேந்திரன், பா.அப்துல் மாலிக், வார்டு கழகச் செயலாளர் தெய்வசிகாமணி, பொதுக்குழு உறுப்பினர் செ.சங்கர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஏ.ஜெ.பவுல், நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், டி. பிரியாகுமார், வி.ஜெ.உமா மகேஸ்வரன், நிர்வாகிகள் ஏ.இ.செல்லதுரை, பா.விஜயசாரதி, ஏ.அப்பு(எ)ஜெயராஜ், ராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் நிர்வாகிகள் என்.ராஜ், விஜயலட்சுமி தெய்வசிகாமணி, ருக்மணிபவுல், மா.விநாயகம், இந்துமதி வெங்கடேசன், சந்திரிகா இளங்கோவன், அனுராதா, சக்கரவர்த்தி, விவேக் கமல், லோகேஸ்வரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் மணமக்கள் 6 வது வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எல். கார்த்திக், ஒய்.சர்மிளா ஆகியோரை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்.*

*இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமிவேல் கணபதி, நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், ஆவடி மாநகர மேயர் ஜி. உதயகுமார் மற்றும் திருவேற்காடு நகர கழக நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் நகர் மன்ற உறுப்பினர்கள் கழக இந்நாள் முன்னால் அனைவரும் கலந்து கொள்கிறார்கள் முடிவில் மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் பசுமை ஐ.ஜேக்கப் 6 வது வார்டு நிர்வாகிகள் ஏ.என்.கோபிநாதன், ஏ.வி.சம்பத், ஏ.எம். வெங்கடேசன், ஏ.பி. இளங்கோவன், ஏ.பி.மணிகண்டன், ஏ.ஜி.சோக்குவேல், ஏ.என்.சத்திய நாதன், ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்*



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் கழகத்தலைவர் முன்னெடுப்பை தொடர்ந்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி திருவேற்காடு நகரம் வார்டு எண் 5 மேல் அயணம்பாக்கம் பகுதியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாபெரும் உறுப்பினர் சேர்க்கை முகாமை வீடு வீடாக சென்று, கழக ஆட்சியின் சிறப்பு திட்டங்களை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்த்தார் அப்பகுதி பொதுமக்கள் திமுகவில் உறுப்பினர் சேர ஆர்வம் காட்டினார். உடன் திருவேற்காடு நகர செயலாளர் என்.இ.கே.மூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், நகர துணைச் செயலாளர் ஆ.க. நடராஜ், வார்டு கழகச் செயலாளர் பிரதானம், நகர இளைஞரணி அமைப்பாளர் அப்பு(எ)ஜெபராஜ் உள்பட பாக முகவர்கள் பி.எல்.ஏ.2 கழக நிர்வாகிகள் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்




தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் ரூ.307.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அருகில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் இ.ஆ.ப. தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.